# முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டம் பற்றிய விவரங்கள் (வினா விடை)

**வினா எண் : 1. இத்திட்டத்தில் பயன்பெறத் தேவையான தகுதிகள்**

**விடை :** 1. குடும்ப அட்டை

2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/–க்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

**வினா எண் : 2. யாரிடமிருந்து வருமான சான்று பெறவேண்டும்?**

**விடை :** கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்றால் போதுமானது.

**வினா எண் : 3. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் மருத்துவ அடையாள அட்டை பெறுவது எப்படி மற்றும் பழைய மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டையை மாற்றுவது எப்படி ?**

**விடை :**

- குடும்ப அட்டை மற்றும் கிராம நிர்வாக அலுவலரால் பெறப்பட்ட (ரூ.72,000/–க்கு குறைவான) வருமான சான்றிதழுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இயங்கும் காப்பீட்டு அடையாள அட்டை வழங்கும் மையத்தில் (District Kiosk) சமர்ப்பித்து அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளலாம்.
- பழைய மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டையை தங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இயங்கும் காப்பீட்டு அட்டை வழங்கும் மையத்தில் சமர்ப்பித்து புதிய மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளலாம்.
- மேலும் விவரங்களுக்கு கட்டணமில்லா தொலைப்பேசி எண்: 1800 425 3993 –ஐ தொடர்பு கொள்ளலாம்.

**வினா எண் : 4. மருத்துவக் காப்பீட்டு அடையாள அட்டையை தொலைத்து விட்டால் புதிய மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டையை எப்படி பெறுவது ?**

**விடை :** தங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் காப்பீட்டு அட்டை வழங்கும் மையத்தில் சென்று ரூ.50/– கொடுத்து புதிய மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளலாம்.

**வினா எண் : 5. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டை ஒரு வருஷம்தான் செல்லுபடியாகுமா ?**

**விடை :** முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ் ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆண்டிற்கு ரூ.1 லட்சம் வீதம் நான்கு ஆண்டிற்கு ரூ.4 நான்கு லட்சம் காப்பீடு தொகை வழங்கப்படுகிறது.

**வினா எண் : 6. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டை அனைவருக்கும் கிடைக்க என்ன வழி செய்யப்பட்டுள்ளது ?**

**விடை :**

- தகுதியான நபர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் காப்பீட்டு அட்டை வழங்கும் மையத்தை ( District Kisok) அணுகி காப்பீட்டு அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளலாம்.
- 6 முக்கியமான பெரிய அரசு மருத்துவமனைகளை அணுகி காப்பீட்டு அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளலாம்.
- கள சேர்ப்பு மையம் (Field level enrolment) மூலமும் பயனாளிகள் காப்பீட்டு அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளலாம்.

**வினா எண் : 7. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் அடையாள அட்டை பற்றிய விவரங்கள் என்ன ?**

**விடை :**

- இது ஒரு அடையாள அட்டை
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்ட அடையாள அட்டை 64 KB திறன் கொண்ட சிப்.
- இதில் குடும்ப தலைவர் மற்றும் உறுப்பினர்கள் புகைப்படங்கள் இடம் பெற்றிருக்கும்.
- 2 வயதுக்கு மேற்பட்டோரின் கைரேகைகள் பதிவு செய்யப் பெற்றிருக்கும்.

❖ காப்பீட்டு திட்டத்தில் மீதம் எவ்வளவு பணம் இருக்கின்றது என்ற விவரத்தையும் தெரிந்து கொள்ளப் பயன்படுகிறது.

**வினா எண் : 8. முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் உள்ள சிகிச்சைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?**

**விடை :** முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் 1016 சிகிச்சை முறைகள் உள்ளன. அவற்றுள் சுமார் 750 அறுவை சிகிச்சைகள் உள்ளது. மேலும் பல்வேறு புற்றுநோய்க்கு முறையாக கதிரியக்கம், மருந்து சிகிச்சை மற்றும் அறுவை சிசிச்சைகள் ஆகியவவை உள்ளன. இதைத்தவிர உயர் சிகிச்சையாக சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, கல்லீரல் மாற்று அறுவை சிசிக்சை, காது நுண் எலும்பு கருவி பொருத்தும் சிகிச்சை, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சைகளும் இத்திட்டத்தில் செயல்பட்டு வருகின்றது.

**வினா எண் : 9. திட்டத்தில் என்னென்ன பரிசோதனைகள் செய்யப் படுகின்றன ?**

**விடை :** இத்திட்டத்தில் 23 வகையான பரிசோதனை சிகிச்சைகள் உள்ளன. உதாரணம் (ECHO, USG, MRI, CT, MAMMOGRAPHY, LFT, RFT, ANGIOCARDIOGRAM, THYROID PROFILE ETC.) இவை இணையதளத்தில் விரிவாக உள்ளன.

**வினா எண் : 10. பரிசோதனை சிகிச்சைகள் எங்கு உள்ளன ?**

**விடை :** முதலமைச்சர் காப்பீட்டு திட்ட இணைய தளத்தில் ஏறத்தாழ 420 மையங்கள் உள்ளன. அரசு மருத்துவமனை மருத்துவர்கள் மூலம் செல்பவர்கள் பயன் பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**வினா எண் : 11. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் அரசாங்க மருத்துவமனைகளில் மட்டும் பெறும் சிகிச்சைகள் எவை?**

**விடை :** பெரும்பாலான ( 162 Out of 1016) முடநீக்கிவியல் அறுவை சிகிச்சைகள், காது, மூக்கு, தொண்டை அறுவை சிகிச்சைகள், சில மகப்பேறு மற்றும் மகளிர் சார்ந்த அறுவை சிகிச்சைகள் மற்றும் சில அறுவை சிகிச்சை முறைகள் அரசாங்க மருத்துவமனைகளில் மட்டுமே பெற இயலும்.

**வினா எண் : 12. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் செய்யப்படும் தொடர் சிகிச்சை முறைகள் எத்தனை ?**

**விடை :** 113 தொடர் சிகிச்சை முறைகள் உள்ளன. Primary Package பெற்றுக் கொண்டவர்களுக்கு மட்டும் பயன் பெற இயலும். www.cmchistn.com இணையதளத்தில் விரிவாக காணவும் அல்லது 1800 425 3993 கட்டணமில்லா தொலைபேசி மூலம் தொடர் சிகிச்சை பற்றிய விவரங்கள் பெறலாம்.

**வினா எண் : 13. இத்திட்டத்தில் விரைவு / தாமதமின்றி சிகிச்சைபெற என்ன செய்ய வேண்டும் ?**

**விடை :** இத்திட்டத்தில் அவசர சிகிச்சைகள் பயனாளிகள் / பிணியாளர்கள் விரைவில் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனை (தனியார் (அ) அரசு) மூலம் அவசர அனுமதி பெற்று சிகிச்சை பெற இயலும். மிக அவசர சிகிச்சைகளுக்கு முதலில் சிகிச்சை பெற்று, பிறகு 24 மணி நேரத்துக்குள் காப்பீட்டு திட்ட அட்டையை கொண்டு சென்று இத்திட்டத்தின்கீழ் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**வினா எண் : 14. வேறு எந்தெந்த சிகிச்சைகள் உயர் சிகிச்சை வாயிலாக நடைபெற உள்ளது ?**

**விடை :** இருதய மாற்று அறுவை சிகிச்சை மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை.

**வினா எண் : 15. தொலைபேசி உதவி மையங்கள் என்றால் என்ன ? (Call Centre)**

**விடை :**

- இது 24 மணி நேரம் செயல்படும் ஒரு மையமாகும்.
- ஒரு நாளுக்கு சராசரியாக 436 அழைப்புகள் வருகின்றன.
- உதவி மையத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண்: 1800 425 3993.

5/12/14

திட்ட இயக்குநருக்காக.